முச்சந்தி முரளி



உந்த டெங்கு
நுளம்புகள் ஒருவழி
பண்ணிப்போட்டுத்தான்
ஓயும்போல

Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 31

புதன்கிழமை
27 டிசெம்பர் 2023

மார்கழி 11 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054



## யாழில் நேற்றுமட்டும் 71 பேருக்கு டெங்கு!

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 27**
**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமட்டும் 71 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. டெங்குத் தொற்றால் நிலைமை கைமீறும் நிலையில் குடாநாடு தற்போதுள்ளது என்று மருத்துவத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

15

### பல்கலை. மாணவியின்
## மரணத்தில் சந்தேகம் பொலிஸில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவியொருவர் அண்மையில் உயிரிழந்த நிலையில், அவருடைய மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவித்து குடும்பத்தினரால் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குணரத்தினம் சுபீனா (வயது-25) என்ற , யாழ்.பல்கலைக்கழக மாணவி, மருந்து ஒவ்வாமையால் உயிரிழந்தார் என்று முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

15

## மாணவியின் இறப்புக்கு உடன் அறிக்கை தருக
### சுகாதார சேவைகள் பணிப்பாளர் உத்தரவு

15

## கெஹலியவை கைது செய்க!
### அரசாங்கத்திடம் கூட்டுக்கோரிக்கை

கொழும்பு, டிசெ. 27
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவைக் கைது செய்யுமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கமும், ஜே.வி.பியும் இணைந்து கூட்டுக்கோரிக்கையை முன்வைத்துள்ளன.
38 வகையான தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமைக்கா

15



## சிறைகளில் இடநெருக்கடி

கொழும்பு, டிசெ. 27
நாடளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இதனால் சிறைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சிறப்பு

15

### வல்வெட்டித்துறையில்
## திருட்டுகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு வீடுகளில் திருட்டுகளில் ஈடுபட்ட ஆறு சந்தேகநபர்களும், திருடப்பட்ட நகைகளைக்

15

## கெஹலியவிடம் விசாரணை

கொழும்பு, டிசெ. 27
தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய

15

## கமராவை திருத்தச் சென்றவருக்கே வற்றாப்பளையில் தீண்டியது பாம்பு
### திருடச் சென்றவர் அல்லர் வெளியானது உண்மைத்தகவல்

15

## தொழிலுக்காகச் சென்றவருக்கு சவூதியில் நேர்ந்தது என்ன?
### முன்பின் முரணான தகவலால் அவரது குடும்பம் பதற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
வடமராட்சியைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் ஒருவர் சவூதிக்குத் தொழில்தேடிச் சென்ற நிலையில், தற்போது குடும்பத்தினருடன் தொடர்பற்ற நிலையில் காணப்படுகின்றார். அவருடைய நிலை குறித்து முன்பின்

15

### பொன்னாவெளி மக்கள் எதிர்த்தாலும்
## சிமெந்துத் தொழிற்சாலையை அமைத்தே தீருவாராம் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 27
எந்தத் திட்டம் வந்தாலும் அதை மக்கள் முதலில் எதிர்ப்பது வழமையே. அதனால் பொன்னாவெளியில் மக்களின் எதிர்ப்பினையும் மீறி சிமெந்துத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்றவாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர்.

15









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொண்டாட வேண்டியவற்றை விடுத்து

# வலைத்தளங்களுள் எந்நேரமும் மூழ்காதீர்!



பல்கலை துணைவேந்தர் அறிவுரை

**யாழ்ப்பாணம், டிசெ.27**

**யாழ்ப்பாணத்தின் அருமை யாழ்ப்பாணத்தவர்களுக்குப் புரியாது. சைவத்தமிழ் மக்கள் மத்தியிலும் கொண்டாடுவதற்குப் பல விடயங்கள் உள்ளன. அவற்றை விட்டுவிட்டு எப்போது பார்த்தாலும் சமூக ஊடகங்களைக் கிளறிக் கொண்டிருக்காதீர்கள்.**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா.

நேற்றுமுன்தினம் சைவ மாணவர் சபை நடத்திய மார்கழிப் பெருவிழாவின் காலை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மார்கழிப் பெருவிழாவில் தூர இடங்களில் இருந்து வந்து பலரும் சிறப்புச் சேர்த்துள்ளனர். யாழ்ப்பாணத்தின் அருமை யாழ்ப்பாணத்தவர்களுக்கு விளங்காது. ஒரு பக்தன் எந்தக் காலத்தில் இருந்தும் வரலாம், எப்படியும் வரலாம். அதைத்தான் பெரியபுராணம் கூறுகின்றது.

பெரியபுராணம், திருவாசகம், திருமுறைகள் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டு இந்தப் பூமியில் பிறந்தது நாங்கள் ஒவ்வொருவரும் செய்த முற்பயன். திருவாசகம், திருமுறைகள் போன்றவற்றை நாம் கொண்டாட வேண்டும்.

இயேசுநாதர் ஒரு ஆங்கிலேயரோ, ஐரோப்பியரோ இல்லை. அவர் ஒரு அரேபியர். மூன்று வருடங்கள் மாத்திரம் தான் பரப்புரை செய்தார். சிலுவையில் அறைந்தார்கள்.

ஆனாலும், தியாகத்தின் அடிப்படையில் அவர் இந்த உலகத்துக்குச் சில செய்திகளைச் சொல்லிச் சென்றமையால் அவரை மக்கள் இன்றுவரை கொண்டாடுகின்றார்கள். சைவத் தமிழ்மக்கள் மத்தியிலும் கொண்டாடுவதற்குப் பல விடயங்கள் உள்ளன"- என்றார். (எ-66)

## வற்றாப்பளையில் 240 ஏக்கர் பயிரழிவு

முல்லைத்தீவு, டிசெ. 27

முத்தையன்கட்டுக்குளம், மதவாளர்சிங்கம் குளம், முறிப்புக்குளம் என்பன நந்திக்கடலுடன் கலந்ததன் காரணமாக வற்றாப்பளையில் 240 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர் அழிவடைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

"வற்றாப்பளையின் வடக்கு வெளி, அம்மன் கோவில் வெளி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்ச் செய்கையே பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

நந்திக்கடலை முழுமையாக நிரம்பவிடாது உரிய காலத்தில் பெருங்கடலுடன் கலக்கும் பகுதி வெட்டி விடப்பட்டிருப்பின் இந்த இடர் நேர்ந்திருக்காது.

இதற்கான நிரந்தரத் தீர்வாக வட்டுவாகல் பாலத்திலிருந்து வட்டுவாகல் பக்கமாகக் குறைந்தது 600 மீற்றர் தூரமாவது நந்திக்கடலில் காணப்படுகின்ற சேற்றை அகற்றுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

## போதை லேகியம் விற்றவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 27

சாவகச்சேரி நகரப்பகுதியில் போதையூட்டும் லேகியத்தை விற்பனை செய்த ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 3 கிலோ 720 கிராம் லேகியம் மீட்கப்பட்டது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)



## 238 காணிப்பிணக்குகள்; வவுனியாவில் தீர்வு

வவுனியா, டிசெ. 27

வவுனியா மாவட்டத்தில் விசேட காணி நடுவர் சபையூடாக 238 காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட காணி மத்தியஸ்தர் சபையில் கடந்த 5 வருடங்களில் ஆயிரத்து 184 காணிப் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நீதிமன்றம், பொலிஸ், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களூடாக தீர்வு எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-110)

## தனியார் பேருந்து மோதி 8 மாடுகள் பரிதாபச்சாவு!

### சாரதி மீது மக்கள் தாக்குதல்

மன்னார், டிசெ. 27

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் நாயாற்றுவழிப் பகுதியில் தனியார் பேருந்தொன்று மோதியதில் 8 மாடுகள் உயிரிழந்துள்ளன.

அதையடுத்து ஆத்திரமடைந்த மாடுகளின் உரிமையாளர்கள் பேருந்தின் சாரதியைத் தாக்கினர்.

இதில் சாரதி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-213)

## விபத்தில் படுகாயம்

வவுனியா, பட்டாணிச்சூரில் நேற்று நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எதிரெதிர்த் திசையில் வந்த இரு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்துத் தொடர்பான விசாரணைகள் நெளுக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-110)

## முதன்மை வீதிகளருகே கால்நடைகளை விடாதீர்

### பொலிஸார் அறிவுறுத்து

கிளிநொச்சி, டிசெ. 27

வீதி விபத்துகளில் சிக்கி அதிகளவு கால்நடைகள் உயிரிழக்கும் நிலையில் கால்நடை வளர்ப்போர் வீதிகளுக்கருகில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வீதி விபத்தில் சிக்கி அதிகளவு கால்நடைகள் உயிரிழக்கின்றன. முதன்மை வீதிகளருகே மேய்ச்சலில் ஈடுபடுத்துவதை தவிர்த்து கால்நடை வளர்ப்பாளர் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-13)

## கழிவுகளை தரம்பிரித்து வழங்குக

யாழ்ப்பாணம், டிசெ. 27

குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புக் கழிவுகளைத் தரம்பிரித்து ஒப்படைக்குமாறு வலி.கிழக்குப் பிரதேச சபை கேட்டுக்கொண்டுள்ளது. உக்கும், உக்காத பொருள்கள் மற்றும் நுளம்பு பெருகக்கூடிய பொருள்கள் எனத் தரம்பிரித்து பொதியாக்கி கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பிரதேச சபையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச-17)

## திருவாதிரை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

கொழும்புத்துறை யோகர் சுவாமி சமாதி கோயிலில் மார்கழித் திருவாதிரை வழிபாடும் நூல்வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

✦ ✦ ✦ ✦

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் இன்று நடேசர் அபிஷேகமும் ஆருத்திரா தரிசனமும் இடம்பெறும். தொடர்ந்து மாணிக்கவாசகர் வீதிவலம் வருவார் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

✦ ✦ ✦ ✦

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாதிரையை முன்னிட்டு இன்று புதன்கிழமை சிறப்பு அபிஷேக பூசைகள் இடம்பெறவுள்ளன. (ச-17)

## யானைகளால் அழிவுறும் தென்னியங்குளம் கிராமம்

முல்லைத்தீவு, டிசெ. 27

யானைகளின் தொடர்ச்சியான அட்டகாசத்தால் முல்லைத்தீவு - துணுக்காய் தென்னியங்குளம் கிராமம் பேரழிவுகளைச் சந்தித்து வருகிறது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 147 குடும்பங்கள் வரை வசித்துவரும் நிலையில் மாலை வேளையில் கூட்டம்கூட்டமாக வரும் யானைகளால் மக்கள் அச்சத்துடன் வீடுகளிலேயே முடங்க நேரிடுகிறது.

தென்னியங்குளம் அணைக்கட்டுக்கு கூடுதலாக வரும் யானைகள் குளத்தின் அணைக்கட்டை சேதமாக்கி வருகின்றன. அத்துடன் வயல் நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குள் நுழைந்தும் பயிர் அழிவுகளை ஏற்படுத்துகின்றன.

வெள்ளஅழிவு ஒருபுறம் வதைக்கும் நிலையில் யானைகளாலும் தொடர்ச்சியாக பயிரழிவுகள் ஏற்பட்டு வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே உரிய அதிகாரிகள் யானைகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளை கண்டறியாத ஆணைக்குழுக்கள்

*உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் சுட்டிக்காட்டு*

**கொழும்பு, டிசெ.27**

**இலங்கையில் உருவாக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக் குழுக்களும் 'என்ன நேர்ந்தது' என்பதைக் கண்டறியவே உருவாக்கப்பட்டன. அவை 'யார் அதைச் செய்தனர்' என்பதைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தற்போதைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் அதை ஒத்த நடவடிக்கையா என்ற சந்தேகம் எழும்பியுள்ளது.**

-இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

1989ஆம் ஆண்டில் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவர் தமது காவலின்கீழ் இருந்தார் என்று இராணுவத்தினர் (தலத்துஓயா இராணுவ முகாம்) கூறுகின்றனர். அந்த நபரை எவ்வித சாட்சியங்களுமின்றி காணாமலாக்கியது யார்? அந்தக் காலப்பகுதியில் தலத்துஓயா இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்டவர் யார்? அதைக் கண்டறிவது கடினமானதல்ல.

பிறிதொரு காணாமலாக்கப்படல் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில், 1990 ஆம் ஆண்டு பேராதனையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு (பின்னர் காணவில்லை) இராணுவத்துக்குச் சொந்தமான வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி தம்மிடம் சரணடைந்து காணாமற் போன நூற்றுக்கணக்கான தமிழர்களை பேருந்து பதிவிலக்கமின்றி (அவர்களை அழைத்துச்சென்ற) கண்டறிய முடியாது என இராணுவம் கூறியிருக்கின்றது என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஏ-இ)

# குடும்ப ஆட்சி இனி வேண்டாம்!

*நீதி அமைச்சர் கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.27

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைமைத்துவத்தைத் தெரிவுசெய்யும் பொறுப்பு அடுத்த வருடம் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. குடும்ப ஆட்சியையோ, பரம்பரை ஆட்சியையோ மீண்டும் தோற்றுவிக்காமல் மக்கள் தமது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். தவறான ஆட்சியாளர்களிடம் நாட்டை ஒப்படைத்ததன் காரணமாகவே அனைத்து மக்களும் அந்தப் பாவத்தை அனுபவிக்க வேண்டியேற்பட்டது. 2024ஆம் ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாகும்- என்றார். (ஏ-இ)

# நிகழ்நிலைச் சட்டம் ஜனவரி நடைமுறை

நிகழ்நிலை காப்புச் சட்டவரைவை அடுத்த மாதம் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. சட்டவரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை குழுநிலை விவாதத்தின்போது மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி நிகழ்நிலை காப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த சட்டவரைவுக்கு எதிராக 40க்கும் அதிகமான மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டவரைவு அல்லது அதன் விதிகள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானவை அல்ல என்று வியாக்கியானம் வழங்கியுள்ளது. (ஏ-இ)

# குற்றச்செயல் குழுக்களுடன் மதத்தலைவர்கள் தொடர்பு

கொழும்பு, டிசெ.27

குற்றச்செயல்களில் ஈடுபட்டுவரும் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணிவரும் சில மதத் தலைவர்கள் பொலிஸாரின் நடவடிக்கைகளை விமர்சிக்கின்றனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் மனஉறுதியைக் குலைக்கும் வகையிலும் சில அரசியல்வாதிகளும் செயற்படுகின்றனர் என்று அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஏ-இ)

# வட்டி வீதம் குறையும்

அடுத்த ஆண்டு வங்கிகளின் கடன் விரிவாக்கம் மேலும் அதிகரிக்கும் என்றும், வங்கி வட்டி வீதம் குறையும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு மாநாட்டில் மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஈ.ஜி.ஜே.கே.எதிரிசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ஏ)

# மருந்து இருப்பு முன்னேற்றம்

கொழும்பு, டிசெ.27

மருந்துகளின் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரத்தில் நாட்டின் மருத்துவமனைகளின் நிலைமைகளை ஆராய்ந்தபோது, இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# தினம் தெரியுமோ?

**இன்டைக்கு இந்தியாவில இருந்து கில்மிஷா யாழ்ப்பாணத்துக்கு வாறா. கில்மிஷா ஆரெண்டதை உங்களுக்குச் சொல்லி விளங்கப்படுத்தவேண்டிய தேவையில்லை. 'ஸரிகமப' நிகழ்ச்சியில அந்தப் பிள்ளை பாடி, முதலாமிடம் வெண்டதை எல்லாரும் பார்த்திருப்பியள். பார்க்காத ஆக்கள் செய்தியிலயாவது அறிஞ்சிருப்பியள். இப்ப அந்தப் பிள்ளை இந்தியாவில இருந்து சொந்த ஊரான அரியாலைக்கு வாறதை, அந்த ஊர்க்காரர் பெருமெடுப்பில கொண்டாடப் போயினம். பலாலி எயார்போர்ட்டில இருந்து அரியாலை மட்டும், சோடிச்ச வாகனத்தில கில்மிஷாவை ஏத்திக்கொண்டு வந்து, பிறகு ஊரில அவா முந்திப் பாடின சாராங்கா இசைக் குழுவில மூண்டு பாட்டுகளும் பாடுற மாதிரி இந்த வரவேற்புக்கொண்டாட்டக்காரர் பிளான் பண்ணியிருக்கினம். சொந்த ஊரில அந்தப் பிள்ளை எத்தனை பாட்டும் பாடலாமே? எதுக்கு இப்பிடி கஞ்சத்தனமா மூண்டு பாட்டோட நிப்பாட்டுகினம்? எண்டு நீங்கள் நினைக்கலாம். அங்கதான் இருக்கு 'ஸீ' ரீவிக்காரரின்ர பிஸ்னஸ் தந்திரம்.**

**கில்மிஷா பாட்டுப்போட்டியில வெண்டதால, அவா இன்னும் ரண்டு வருசத்துக்கு 'ஸீ' ரீவியின்ர அனுமதி இல்லாமல் எங்கையும் பாடக் கூடாது. பேட்டி குடுக்கக்கூடாது. அப்பிடி அனுமதியில்லாமல் பாட்டுப் படிச்சாலோ, பேட்டி குடுத்தாலோ அவாக்கு கிடைக்கவேண்டிய பரிசுத் தொகையை ரீவிக்காரர் குடுக்கமாட்டினம். இது தான் அந்த நிகழ்ச்சியின்ர ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தில சைன் வைச்சதால, கில்மிஷாவும் இன்னும் ரண்டு வருசத்துக்கு சொந்த ஊரிலகூட, அவ்வளவு ஏன் வீட்டிலகூட பாட (கச்சேரி வைக்க) ஏலாது. ஆனால் அந்த ரீவிக்காரர் உலகமெல்லாம் நடத்தப்போற எல்லா இசை நிகழ்ச்சிக்கும் கில்மிஷா போகவேணும். இப்ப கில்மிஷாவின்ர மதிப்பு வெளிநாட்டில எப்பிடியிருக்கு எண்டு உங்களுக்கெல்லாம் தெரியும். பத்துப் பதினைஞ்சு லட்சம் குடுத்தெண்டாலும் வெளிநாட்டுக்குக் கூப்பிட்டு கில்மிஷாவின்ர கச்சேரியளை வைக்க எங்கட ஆக்கள் ரெடியாத்தான் இருக்கினம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால கில்மிஷா அங்கையெல்லாம் தானா போக ஏலாது. வேணுமெண்டால் 'ஸீ' ரீவிக்காரர் தான் அந்த நிகழ்ச்சியை ஒழுங்கு பண்ணிக் கூட்டிக்கொண்டு போகவேணும். அப்பிடி அவை ஒழுங்கு செய்தால், அதால வாற எல்லா லாபமும் ரீவிக் காரருக்குத்தானாம். எங்கட பிள்ளையை வைச்சு அவங்கள் உழைச்சுக் கொட்டப் போறாங்கள்.**

**சரி, இப்பிடி ஒப்பந்தம் இருக்கேக்க இன்டைக்கு மூண்டு பாட்டைப் பாட எப்பிடி ஓமெண்டவை? எண்டு நீங்கள் கேக்கலாம். கில்மிஷாவும், அவான்ர பெற்றாரும் ரீவிக்காரரிட்ட "எங்கட ஊருக்குப் போகேக்க எப்பிடியும் பாடச் சொல்லிக் கேப்பினம். அதோட கில்மிஷா ஆரம்பத்தில இருந்தே பாட்டுப் படிக்க களம் குடுத்த இசைக் குழுவுக்கும் நன்றி செலுத்திற மாதிரி, கட்டாயம் பாடோணும் எண்டெல்லாம் கெஞ்சிக் கூத்தாடித்தான் மூண்டு பாட்டுப் பாட ரீவிக்காரர் அனுமதி குடுத்தவையாம். குயிலைப் பிடிச்சு இப்பிடிக் கூட்டுக்குள்ள அடைக்கவோ முதலாமிடம் குடுத்தவை? எண்டாலும், யாழ்ப்பாணத்துக் குயிலுக்கு எப்பவும் எங்கட வாழ்த்துகள்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**

அன்புக்கு அடிமையாகி அனைவருக்கும் உதவும் மனம் படைத்த விருச்சிக ராசிக்காரர்களே...




இதுவரை உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்ந்து பலவிதமான நற்பலன்களை வழங்கி வந்த சனிபகவான் தற்போது நாலாம் இடம் எனப்படும் அட்டமத்து என்னும் அனுகூலமற்ற நிலையில் சஞ்சாரம் செய்ய இருக்கிறார். சுகவீட்டில் சனியின் சஞ்சாரம் விருச்சிக ராசிக்கு அலைச்சலைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். என்றாலும் மன வலிமை அதிகரிக்கும். கும்பத்தில் ஆட்சிபெற்று அமரும் சனிபகவானால் குடும்பத்தில் நிம்மதி நிறைந்திருக்கும். வாழ்க்கைத்துணையின் சொல்லைக் கேட்டு நடக்கப் பாருங்கள். அதனால் பல விதங்களிலும் நன்மைகள் உண்டாகும். வேலைகளை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை முயற்சி செய்ய வேண்டியிருக்கும். செலவுகளும் அளவுக்கு மீறிக் காணப்படும்.

முக்கியமானவேலைகளை நீங்களே முன்னின்று முடித்துவிடுங்கள். அதிக வட்டிக்குக் கடன் வாங்கி திண்டாடும் நிலை ஏற்படலாம். வீடு, வாகனம் வாங்கும் முன்பு உரிய ஆவணங்களை முறையாகப் பரிசோதித்து வாங்குங்கள். பயணங்களில் உரிய கவனம் தேவை. குடும்பத்தின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள்.

பிள்ளைகளின் கல்வி, வெளிநாட்டுப்பயணம் ஆகிய வற்றுக்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கும் மே மாதம் குருப்பெயர்ச்சிக்குப் பின் பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். குருவின் பார்வை கஷ்டங்களை எல்லாம் நீக்கும். பணியிடத்தில் பேரும் புகழும் வாய்க்கும். பணவரவு அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கூடிவரும் சனிபகவான் உங்கள் ராசிக்கு 1, 6, 10 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் அடிக்கடி உடலில் சோர்வும் மனதில் சலிப்பும் வந்துபோகும். கழுத்துப் பகுதியில் சிறு வலி வந்து நீங்கும். தண்ணீர் தொடர்பான தொற்றுகள் வந்து நீங்கும். சனியின் 6ஆம் பார்வையால் பணவரவில் இருந்த தடைகள் நீங்கும். கடன் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முயல்வீர்கள்.

**வியாபாரம்:** கொடுக்கல் வாங்கலில் கறாராக இருங்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பிக் கடன் கொடுக்கவேண்டாம். வாடிக்கையாளர்களிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள். எவரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கவேண்டாம்.

**உத்தியோகம்:** சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறும் காலம் இது. கொடுக்கப்பட்ட பணிகளை உரிய காலத்தில் முடித்துவிடுங்கள். மறைமுக அவமானங்கள் அவ்வப்போது ஏற்படும். 2024 மே மாதத்துக்குப் பின் பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி பணிச்சுமையையும் செலவுகளையும் கொடுத்தாலும் தொலை நோக்குச் சிந்தனையால் துணிச்சலோடு போராடி வெற்றி பெற வைக்கும்.**



## தண்டுவான் மாணவருக்கு துவிச்சக்கரவண்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

முல்லைத்தீவு, தண்டுவான் மகாவித்தியாலயத்தில் கல்விபயிலும் இரண்டு மாணவர்களின் போக்குவரத்து இடர்நிலையை தவிர்ப்பதற்கென துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டானை பூர்வீகமாகக் கொண்டு கனடாவில் வசிப்பவரான சி.சிவஞானரூபன் என்பவரின் நிதிப்பங்களிப்பில் அவை கையளிக்கப்பட்டன. (ச-500)

## ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.27

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-100)

### கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு
## 39 கைதிகளுக்கு வடக்கில் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ. 27

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு வவுனியா மற்றும் யாழ்ப்பாணச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 39 கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 4 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் யாழ்ப்பாணம், வவுனியா சிறைகளில் இருந்து 39 பேர் விடுவிக்கப்பட்டனர். வவுனியா சிறைச்சாலையில் இருந்து 23 கைதிகளும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 16 கைதிகளுமே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர். (ம-110,20)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெங்கைத் தடுப்பது நம் கையில்!

கடந்த ஆண்டுகளைவிடவும் இந்த ஆண்டு வடக்கில் டெங்குத் தொற்று பேரிடராக மாறியிருக்கின்றது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் பலநூறு பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியிருக்கும் நிலையில், உயிரிழப்புகளும் பதிவாக ஆரம்பித்திருக்கின்றன. வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிலைமை மோசமாக இருக்கின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட விடுதிகளைத் திறக்கும் அளவுக்கு, மருத்துவமனை டெங்குத் தொற் றாளர்களால் நிரம்பியிருக்கின்றது. தற்போது பெய்து ஓய்ந்திருக்கும் மழை இந்தநிலைமையை இன்னும் மோசமாக்கும் என்பதில் ஐயமில்லை.

சுகாதாரத் துறையினரால் தற்போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், அவை முழுமையாகப் பயனளிக்கும் என்று சொல்லிவிடமுடியாது. தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காலம்கடந்த நடவடிக்கையே. மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்து, களத் தரிசிப்புகளை சுகாதாரத்துறையினர் சரிவர மேற்கொண்டிருந்தால் டெங்குத் தொற்று நிலைமை இந்தளவுக்கு வீரியம் பெற்றிருக்காது.

சில மாதங்களுக்கு முன்னரே டெங்குத் தொற்று அபாயம் தொடர்பாக எதிர்வுகூறப்பட்டிருந்த நிலையில், பிரதேச செயலகங்கள் ஊடாக டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியிருக்கவேண்டும். ஆனால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உட்பட யாழ்ப்பாணம் மாவட்டத்தின் முக்கியமான இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான இடங்கள் இனங்காணப்பட்டிருந்தன. இவை கடந்த காலங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் சீத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. எனினும் இதற்கு சுகாதாரத்துறையினரை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாது. தத்தம் சூழலை டெங்கு பரவாத வகையில் சுத்தமாகப் பேணவேண்டிய பெரும் பொறுப்பு சகலரையும் சாரும்.

டெங்குக் காய்ச்சலுக்கென மருந்து எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், டெங்குத் தொற்றை ஏற்படுத்தும் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே ஒரே தீர்வாக இருக்கின்றது. எனவே சுகாதாரத் துறையை மட்டும் நம்பியிருக்காமல் பொதுமக்கள் இந்த விடயத்தில் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் தாம் வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதன் ஊடாகவே டெங்குத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். தற்போதைய அபாய நிலைமையை உணர்ந்து பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டால் இந்தப் பேரிடர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது மிக இலகு. அதை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும்.





# தமிழ்க் கட்சிகளே கைகோருங்கள்!

## சம்பிக்க அழைப்பு

**கொழும்பு, டிசெ.27**

**நாட்டை மீட்பதற்கான பரந்துபட்ட அரசியல் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரான சம்பிக்க ரணவக்க.**

எம்மிடம் பிரிவினைவாதம் கிடையாது. பொதுஜன பெரமுனக் கட்சியா, சுதந்திரக் கட்சியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா, முஸ்லிம் காங்கிரஸா, ஐக்கிய மக்கள் சக்தியா எனக் கட்சி வேறுபாடும் கிடையாது.

ஒருமித்த நிலைப்பாட்டுடன் ஒன்றாக இணைந்து பயணிப்பதற்கு நல்ல மனிதர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லக்கூடிய பரந்துபட்ட தேசியக் கூட்டணியை அமைப்போம். நாட்டைப் பிரச்சினையிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ-44)

# கொரோனாத் திரிபு தாக்கம் குறைவு!

கொழும்பு, டிசெ. 27

தற்போதைய தரவுகளின்படி கண்டறியப்பட்ட புதிய கொரோனாத் திரிபின் தாக்கமானது இலங்கையில் மிகக் குறைவாகக்காணப்படுகிறது என்று சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சட்டவிரோத புலம்பெயர்வு: 14 இலங்கையர் நாடுகடத்தல்

கொழும்பு, டிசெ. 27

சட்டவிரோதமான முறையில் பிரான்ஸ் சென்ற 14 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்ட நிலையில் அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் படகு மூலம் பிரான்ஸின் ரீயூனியன் தீவுக்குச் சென்ற 7 இலங்கையர்கள் உட்பட 14 பேரே இவ்வாறு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். (ச-இ)

# மின்சாரம் பாவிக்காமல் 30,000 பேர்

கொழும்பு, டிசெ.27

கடந்த மூன்று மாதங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்தாத 30 ஆயிரம் வாடிக்கையாளர்கள் உள்ளனர் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இவர்களில் வெளிநாடுகளுக்குச் சென்ற மின்சாரப் பாவனையாளர்களும், வசிப்பிடத்தை மாற்றியவர்களும் அடங்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அதிகாரசபையாக மாறும் ரயில்வே திணைக்களம்?

கொழும்பு, டிசெ. 27

புகையிரத திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் திட்டவரைவின் இறுதி வடிவத்தை இதற்கென நியமிக்கப்பட்ட குழு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை- புகையிரத திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் நடவடிக்கைக்குப் புகையிரத தொழிற் சங்கங்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. (ச-6)

## நாளை

28.12.2023
**வியாழக்கிழமை**
**மார்கழி 12**
சுபநேரம் : 07.58 - 09.28
ராகுகாலம் : 01.58 - 03.28

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் தவறுகளே செய்யவில்லை என்றால், நீங்கள் எதுவுமே செய்யவில்லை.**

**– ஜான் வூடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை அனர்த்தம்: நாடெங்கும் அஞ்சலி

## வடமராட்சி, உடுத்துறையில் சுனாமி நினைவேந்தல்!

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் சுனாமி பேரழிவு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பொதுநினைவிடத்துக்கு மலர் மாலை, அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலிகளும் இடம்பெற்றன. (எ-27)






சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்திலும், பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபியிலும் நடைபெற்றது. (எ-110)



சுனாமி ஆழிப்பேரலை கோரத்தாண்டவத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் அனுஷ்டிக்கப்பட்டது. மணற்காடு சவக்காலைப்பிட்டியில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ச-100,66)



சுனாமிப் பேரலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப் பட்டது. சுனாமியால் உயிரிழந்த உறவுகளுக்கு நினைவுச் சுடர்கள் ஏற்றி மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தினர். (ச-66,125)



தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வு இடர்முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது. இடர்களால் உயிரிழந்த மக்கள் நினைவாக இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு, ஆழிப்பேரலையில் இறந்த உறவுகளுக்காகச் சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-214)




## உறவுகளின் கண்ணீரால் நனைந்த முல்லைத்தீவு

ஆழிப்பேரலை இடரால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவேந்தல் வளாகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைத்து சுடர்களை ஏற்றி கண்ணீர் விட்டு அஞ்சலி செலுத்தினர். (ச-19)

## வவுனியாவில் அஞ்சலி

சுனாமி 19ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று வவுனியா குட்செட் வீதியிலுள்ள கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. சுனாமியில் உயிர்நீத்த உறவுகளுக்காக மோட்ச தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. (எ-110)





ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்பில் உணர்வுபூர்வமாக நேற்று இடம்பெற்றது. (ச-19)

ஆழிப்பேரலை பேரிடர் நினைவு நிகழ்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் நிலையில் ஆழிப் பேரலையில் உயிர்நீத்தோரை நினைவுகூரும் முகமாக சிற்பக் கண்காட்சி தெல்லிப்பழை ஆனந்தன் சிற்பாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் தத்ரூபமாகச் செதுக்கப்பட்ட பல்வேறு சிற்பங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. (ச-27,66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.27

மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு வலயக்கல்வி மற்றும் கிளிநொச்சி வடக்கு விசேட கல்வி பிரிவினரால் நடத்தப்படும் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு பளை மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் திருமதி சஞ்சீவன் குனஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்வில் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ரி-113)

## சிவதொண்டர் வதிவிட பயிற்சிநெறி



யாழ்ப்பாணம், டிசெ.27

அகில இலங்கை சைவ மகா சபையால் வலிகாமம் மற்றும் தீவக கல்வி வலயங்களின் ஒத்துழைப்புடன் வட்டு இந்துக் கல்லூரியில் தரம் 8 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இளம் சிவதொண்டர் வதிவிட பயிற்சி நெறி அகில இலங்கை சைவமகாசபையின் பொது செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. (ரி-125)



தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட இரண்டாம் தேசிய மொழி சிங்களப் போட்டியில் வெற்றிபெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை அதிபர் ஆ.லோகேஸ்வரன் மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார். (ச-75)



மன்னார் நகர சபையின் கழிவகற்றல் செயற்பாட்டில் சட்ட ரீதியாக ஏற்பட்டுள்ள தடங்கல் தொடர்பாகவும், மன்னார் நகர் மக்கள் எதிர்கொண்டுள்ள பெரிய சுகாதாரப் பிரச்சனையை தொடர்பாகவும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான மெசிடோ நிறுவன மன்னார் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ ஏற்பாட்டில் கலந்துரையாடல் மன்னார் நகர சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ரி-60)



மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மனக்கணிதப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற திருநெல்வேலி UCMAS இல் பயிலும் 19 மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு அண்மையில் யாழிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது. UCMAS இயக்குநர் திருமதி ராதை பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதமவிருந்தினராக பங்கேற்றார். (ச-125)



கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் பாதிப்படைந்த தேவன்பிட்டி கிராமத்து மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி கனகரெத்தினம் திலீபன் தலைமையில் வேல்ட் விஷன் நிறுவனத்தினரால் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் 75 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ரி213)




யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேருரை நிகழ்வு சங்கத் தலைவர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மு.ப 10.15 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீடசைவசித்தாந்தத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் கலந்து கொண்டு "நாவலர் வழியே நமக்கு வழி" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றினார். (ரி-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மார்கழித் திருவெம்பாவை கால விசேட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பக்திப் பாடல்களைப் பக்கவாத்திய சகிதமாகப் பண்ணுடன் இசைத்தார். (ச-66)




சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதேச செயலாளர்.இ.பிரதாபன், உதவிப் பிரதேச செயலாளர் த.தர்மேந்திரா, கணக்காளர் ப.விமலநாதன் மற்றும் விசேட தேவையுடையோர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 05 . 1945



மறைவு
26 . 12 . 2023

## இராமலிங்கபிள்ளை இராஜேஸ்வரி

தொல்புரம் கிழக்கு, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கபிள்ளை இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (26.12.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராமலிங்கபிள்ளையின் (ஓய்வு பெற்ற பிரதம காசாளர், ஐக்கிய வியாபாரச் சங்கம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, அன்னப்பிள்ளை, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேற்பிள்ளை, தருமநாயகி, கணேஸ்வரி, நகுலேஸ்வரி, சிவனேஸ்வரி, சபாநாயகம், பிரேமாவதி ஆகியோரின் மைத்துனியும், பங்கயற்செல்வி (லண்டன்), அபிராமி (வலி.மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவக்குமரன் (லண்டன்), நாகராஜா (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜானுகா, கஜானன், விசாகன், அபிலாஷ், கபிஷன், மகீசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.12.2023) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வழுக்கையாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**மடத்துப்பிள்ளையார் கோவிலடி,
தொல்புரம் கிழக்கு, தொல்புரம்.** (CS 41390) S-1

**தொடர்பு: 077 034 4242**

# மரண அறிவித்தல்



## வேலாயுதர் கிட்டிணபிள்ளை

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கிட்டிணபிள்ளை அவர்கள் நேற்று (26.12.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் சீதேவிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமுப்பிள்ளை நீலதாலாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா, இராசம்மா மற்றும் பார்வதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வரதலட்சுமியின் அன்புக் கணவரும், மயூரன் (லண்டன்), சுதந்தா (ஆசிரியை, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி), காயத்திரி (லண்டன்), குகநேசன் (லண்டன்), முரளீதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்துஜா (லண்டன்), விமலகுமார் (யாழ்.மாநகர சபை), நந்தன் (லண்டன்), அனுசியா (லண்டன்), கௌசிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யதீக்கா, ஆதிரா, அபிஷயன், காவியா, திபிஷா, மிஷா, டிவீனா, அதர்வா, கிருத்திக், இனியா ஆகியோரின் பேரனும், வைத்தியநாதபிள்ளையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2023) வியாழக்கிழமை மீசாலை மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 41392) S-1 **077 312 6934, 077 113 3406**

# ரணிலின் யாழ். வருகையில் காணி விடுவிப்புக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும்போது காணி விடுவிப்புத் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவள பாதுகாப்புத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு 11 கட்டங்களாக நடவடிக்கை எடுப்பதாயிருந்தது. அவற்றில் 4 கட்டங்களே பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஏனையகட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏப்ரல் மாதத்துக்குள் அவை அனைத்தும் முழுமைபெறும். ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது காணி விடுவிப்புத் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என்றார். (அ-ம-125-20-66)

**வீடுகளுக்கு வந்து கற்பித்தல்**
தமிழ் / ஆங்கில மொழிமூலம்
**ஆங்கிலம்** - சகல தரங்களுக்கும்
**புவியியல், வரலாறு, குடியியல்**
அனைத்து தரங்களுக்கும்
**கணக்கீடு** - தரம் 09,10,11,12,13
தொடர்புகளுக்கு:-
**077 331 6402/074 285 2760**

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 03 . 1962



மறைவு
26 . 12 . 2023

## சிவநாதன் பிறேமாவதி (பிறேமா)

சரசாலை மத்தியை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு, ஊரெல்லைத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவநாதன் பிறேமாவதி அவர்கள் நேற்று(26.12.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவம் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவநாதனின் அன்பு மனைவியும், அமரர் சிவரஞ்சன் (றஞ்சன்), சிவரூபன் (ரூபன் - பிரான்ஸ்), செல்வகுமார் (மதன் - பிரான்ஸ்), தபேந்திரன் (வேந்தன் - வேந்தன் பந்தல் சேவை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவதர்சினி (தர்ஷா - பிரான்ஸ்) சிந்துஜா (சிந்து - பிரான்ஸ்), நிதர்சினி (நிதர்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானியின் அன்புப் பேர்த்தியும், சிவாநந்தசோதி (சோதி), யோகாம்பிகை (ராசா), கலாநிதி (கலா), கெங்காதேவி (பேபி), சரஸ்வதி (சாந்தி), மகேஸ்வரன் (மகேசன்), குகன் ஆகியோரின் அன்பு சகோதரியும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற அமரர் சிவாநந்தன், திரவியசெல்வம், பாலசுப்பிரமணியம், சிறீதரன், இராஜேஸ்வரி, குமுதினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2023) புதன்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 41391) S-1

# மதுவிற்பனை ஒருவர் கைது

யாழ், டிசெ. 27

போயா தினமான நேற்று வீட்டில் வைத்து மதுபானப் போத்தல்கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் மடத்தடியைச் சேர்ந்த ஒருவர் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 102 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ-26-27)



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நய[ி]னாதீவு.
## மகா கும்பாபிஷேகத்திற்கான ஒலி, ஒளி அமைப்பு வேலைக்கான கூறுவிலை கோரல்

கோவிலில் மகா கும்பாபிஷேகத்திற்கான ஒலி ஒளி அமைப்பு சேவைக்கான பொருட்கள் கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலத்தில் கூறுவிலைப் படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி **2024.01.06** ஆம் திகதி பி.ப. **1.00** மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடிதம் மூலம் அனுப்புவர்கள் **2024.01.06** ஆம் திகதி பி.ப. **1.00** மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் **செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். **கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ஒலி, ஒளி அமைப்புக்கான கூறுவிலை** என காட்டப்படல் வேண்டும்.

**ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.** (N 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

27.12.2023
புதன்கிழமை




**"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்"**

**பொருள்:** அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீயவாழ்க்கையில் செலுத்திவிடும். - **வள்ளுவர்**

# விவசாயிகளின் வில்லனாக வெண்முதுகுத் தாவரத்தத்தி


**ஆனந்தராசா கிஷாந்தன்**
விவசாயபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


தற்போது எமது விவசாய நிலங்களில் வெண்முதுகுத் தாவரத் தத்தியின் தாக்கமானது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. இந்த வெண்முதுகுத் தாவரத் தத்தியானது முன்பும் இருந்த ஒன்றுதான். ஆனால், முந்தைய காலங்களில் சிறு அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. தற்போது இது மிகக்குறுகிய காலப்பகுதியில் பெருமளவில் நட்டத்தை ஏற்படுத்தும் பிரச்சினையாக விவசாயிகளுக்கு மாறிவருகின்றது. அதிலும் வடக்கு மாகாண விவசாயிகளுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

தற்போது வவுனியா, கிளிநொச்சி பிரதேசங்களில் இதன் தாக்கமானது மிகவும் பாராதூரமாக உள்ளது. இந்தப் பூச்சி பற்றிய முறையான இனம்காணலும் அது தொடர்பான கட்டுப்படுத்தல் முறை பற்றிய விழிப்புணர்வின் மூலமுமே இந்த நோயின் தாக்கத்திலிருந்து இலகுவாக விடுபட்டு கூடுதல் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.



## அடையாளம் காணும் முறை

பெரும்பாலும் இந்தப் பூச்சிகள் கபில நிறத் தத்திகளுடன் சேர்ந்தே காணப்படும். அதனால் இவற்றை அடையாளம் காண்பது கடினம். முறையான அவதானத்தின் மூலமே இலகுவாக இனம்கண்டு கொள்ளலாம். எனினும் பின்வரும் அடையாளங்களைக் கவனிப்பதன்மூலம் வெண்முதுகுத் தத்திகளை ஓரளவுக்கேனும் இனங்காணலாம்.

- பருவ ஆரம்பத்தில் அதாவது அணங்கு பருவத்தில் இப்பூச்சிகள் வெண்நிறமாகவும் பின்னர் சாம்பல் நிறமாக அல்லது கறுப்பு நிறமாகவும் இருக்கும்.
- பொதுவாக நிறையுடலிகள் சுமார் 3 தொடக்கம் 4 மில்லிமீற்றர் நீளமானதாகக் காணப்படும்.
- நெஞ்சின் மத்தியில் வெண்ணிறமான கோடு காணப்படும்.
- முட்டைகளை தண்டுகளில் அல்லது இலைகளின் நடுப்பகுதியினுள்ளே இடுகின்றன.
- பெண்பூச்சிகள் பெரும்பாலும் குறுகிய சிறகுகளையும் ஆண் பூச்சிகள் நீண்ட சிறகுகளையும் கொண்டதாகக் காணப்படும்.

## பூச்சித் தாக்குதலை அடையாளம் காணும் முறை

நெற்பயிரின் ஆரம்பப் பருவத்தில் இவை எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படும். பின்னர் குடலை பருவத்தில் இதன் எண்ணிக்கை குறைந்துவிடும். தாவரங்களில் முட்டை இட்டு அவை இனம் பெருகி நீரின் மூலம் ஒரு தாவரத்தில் இருந்து மற்றைய தாவரத்தை அடையும். இவை விரைவான இனப்பெருக்க ஆற்றலைக் கொண்டன. இந்தப் பூச்சிகள் மேலும் சாதகமான சூழ்நிலையில் அவற்றின் குடித்தொகை கணிசமாகப் பெருக்கி குறுகிய காலத்தினுள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இனிப்புத் தன்மையான சுரப்பினை தாவரங்கள் வெளியேற்றும்போது அந்த இனிப்புச்சுரப்பு பூச்சிகளை ஈர்க்கின்றது. பூச்சிகளின் பெருக்கம் காரணமாக இலைகளில் பாதிப்பை ஏற்படுத்தி ஒளித்தொகுப்பைப் பாதித்து விளைச்சலைக் குறைக்கின்றன.



1. இந்தப்பூச்சியின் தாக்குதலுக்குப் பிறகு இலைகள் மஞ்சள் நிறமாக மாறும், பின்னர் அது பழுப்பு நிறமாக மாறும்.
2. நீரின் மேல் தத்தியின் உதிர்ந்த தோல்கள் தேங்காய்பூ துருவிவிட்டது போன்று காணப்படும்.
3. நீருடன் தொடுகையில் இருக்கும் பகுதியில் தத்தியின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும்.
4. இவை நெற்பயிர்களின் சாற்றை உண்பதால் எரிவு போன்ற தீக்காயத்தை ஏற்படுத்துகின்றன.
5. இந்தச் சேதத்தால் இலை விளிம்புகள் உலர்ந்து மஞ்சள் நிறமாக மாறுகின்றன.
6. இறுதியாக, அது வைக்கோல் போன்ற எரிந்த இலைகள் போல் காட்சியளிக்கும்.
7. இவை நெல் இலைகளைப் போலவே நெற்தானியங்களிலும் இருந்து சாற்றைக் குடிக்கும். இதனால் நெல் நிறம் மாறி பதராகமாறும்.
8. மேலும் கடுமையான சந்தர்ப்பங்களில், இது முழுமையான தாவர மரணத்துக்கு வழி வகுக்கும்.
9. வயலில் தும்பி பறத்தலின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும்.
10. கடுமையான தாக்குதலைத் தவிர்க்க ஆரம்ப நிலைமையிலேயே பூச்சியைக் கட்டுப்படுத்துவது நல்லது.

## கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

1. முதலில், அனைத்து விவசாயிகளுக்கும் இந்தப் பூச்சி தாக்குதலின் நடத்தை மற்றும் பாதிப்பு பற்றித் தெரியப்படுத்தல் வேண்டும்.
2. நெல் வயலில் காணப்படும் களைகளை அழிக்கவேண்டும்.
3. நைதரசன் உரத்தை உரிய நேரத்தில் அனைத்து வயல்களுக்கும் பரிந்துரைக்கப்படும் அளவில் பயன்படுத்தவேண்டும்.
4. பசளைகளை இடும்போது பெரும்பாலும் நெற்பயிரின் அடிப்பகுதியில் இடவேண்டும்.
5. பூச்சிக்கொல்லிகளை ஒன்றாக கலந்து விசுறுதலைத் தவிர்த்தல் வேண்டும்.
6. சுழற்சி முறையான பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவேண்டும்.
7. ஒரே பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் ஒரே நேரத்தில் பயிர்செய்கையை ஆரம்பித்தல் வேண்டும்.
8. முன்கூட்டியே பயிரை நடவு செய்தல் வேண்டும்.
9. வேளாண்மைக்குத் தேவையான ஊட்டச்சத்தை சீராக வழங்கிக் கொண்டு இருத்தல் வேண்டும்.

விவசாயத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளான தியோசைக்ளைம், பி.பி.எம்.சி., தியோமெதாக்சம், பைப்ரோனில், எத்திப்ரோல், பெரோபுகால்ம் ஆகியவை நெற்பயிர்களில் வெண்முதுகுத் தாவரத்தத்தித் தாக்குதலை மிக விரைவாகக் குறைக்க உதவும் பூச்சிகொல்லிகள் ஆகும். இதுதொடர்பான மேலதிகமான சந்தேகங்களை அந்தந்தப் பிரதேசங்களுக்கு உரிய விவசாய ஆலோசக உத்தியோகத்தர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ மருத்துவர் சி.யமுனாநந்தா

# காலப்புள்ளிகளை இணைக்கும் கந்தபுராணம்

உலகில் வெவ்வேறு யுகங்கள், மன்வந்தங்கள், கற்பங்களில் நிகழ்ந்தவைகளை மக்களை அறநெறிப்படுத்துவதற்காக அருளப்பட்டதே வேதங்கள். உலகில் அறம் மருகியபோது வேதநெறிகள் மீறப்பட்டபோது திருமால் சிவனிடம் முறையிட, சிவனருளால் திருமால் பூலோகத்தில் விசயர் என்ற முனிவராக அவதரித்து வேதங்களை தனது சீடர்களுக்கு அருளினார். இவற்றுள் பத்து சிவபுராணங்களாகவும், விஸ்ணு புராணங்களாக நான்கும், பிரம புராணங்களாக இரண்டும், சூரிய புராணமாக ஒன்றும், அக்கினி புராணமாக ஒன்றும் ஆக பதினாறு புராணங்கள் வடமொழியில் அமைந்துள்ளன. சிவபுராணங்களில் ஒன்றே கந்தபுராணமாகும். வடமொழியில் அமைந்த கந்த புராணத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் நல்கினார்.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் அண்டவெளியில் தகவல்கள் யாவும் ஒலியலைகளாகச் சேமிக்கப்படலாம் என்பதனை உறுதிப்படுத்தி உள்ளது. அவ்வாறே தெய்வபாசை எனப்படும் சமஸ்கிருத ஓசையிலே வெவ்வேறு மன்வந்தரங்களில் நிகழ்ந்தவைகளை விளக்கி சிவதத்தவத்தினைத் தனது சீடர்களுக்கு வேதவியாசர் அருளினார். இதில் மெய்ஞானத்துக்கு முதன்மையானது அசபை யோகநிலையாகும்.

கந்தபுராணப் பாடல்களைக் கற்கும்போது வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்தவைகளை ஒரு கணத்தில் காண்பது காலாக்கினி அல்லது காலகண்டம் எனலாம். இது இன்றைய விஞ்ஞானத்தில் கால ஒடுக்கம் எனக் கூறப்படுகின்றது. காலத்தின் படைப்பினை காலகண்ட உருத்திரன் மேற்கொள்வதாக சிவமூர்த்த மகிமை கூறப்படுகின்றது. இதனைக் காலாக்கினீசுவர் எனவும் காணலாம்.

*கோர மிக்குயர் நூறு பத்தாயிரகோடி*
*சார தத்தொகை சூழ்தரச் சதுர்முகன் முதலோர்*
*ஆருமச்சுறச் சரபமாய் வந்தருள் புரிந்த*
*வீரபத்திர வுருத்திரன் வந்தனன் விரைவில்.*

*(கணங்கள் செல் படலம் 7)*

இங்கு வெவ்வேறு கற்பங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் ஒருங்கே கூறப்பட்டுள்ளன. இதுவே ஆதி பௌதீகம், ஆதி தெய்வீகம் மற்றும் ஆதி ஆன்மீகமாகும். அதி உன்னத யோகநிலையிலேயே இவ்வாறான வெவ்வேறு கற்ப நிகழ்வுகள் ஒருங்கே மெய்யுணரப்படும். காலத்தின் வெவ்வேறு புள்ளிகளை கந்தபுராணத்தில் ஒருங்கே காணலாம்.

வெவ்வேறு கற்பங்கள், மனவந்தரத்தில் ஒளியின் வேகம் வேறுபடும். ஈர்ப்பு அலைகளின் வேகம் வேறுபடும். பிரபஞ்சப் பிரக்ஞை வேறுபடும். சரம் என்ற பிரபஞ்சமும் அசரம் என்ற மாற்றுப் பிரபஞ்சமும் காணப்படும். பிரபஞ்சத்தில் பல புவனங்கள் காணப்படும். இதில் அனாசிருதை முதல் காலாக்கினியீறாகிய 224 புவனங்களும் புத்தியட்டகம் என்னும் எட்டு சூக்கும புவனங்களும் அடங்கும். சூக்கும புவனங்களாவன பைசாசகம், இராசஷம், யாஷம், காந்தரூவம், மகேந்திரம், சௌமியம், பிராசேசுவரம், பிராமம் என்பனவாகும். இதனைக் கந்தபுராணத்தில் காணலுறலாம்.

*இத்திறத்தரா முருத்திரர் அல்லதையேனை*
*மெத்து பல் புவனங்களு மளித்த வண்மேவி*
*நித்தன் அன்புறும் உருத்திர கணங்களும் நெறிசேர்*
*புத்தி யட்டக முதல்வரும் வந்தனர் பொருப்பில்.*

*(கணங்கள் செல் படலம் 10)*

சில மன்வந்தரத்தில் ஆறுகள், மலைகள், நட்சத்திரங்கள், கடல்கள் என்பனவும் உயிர்த்தன்மை பெறும் இதனைக் கந்தபுராணத்தில் காணலாம்.

*மேதகு பொலஞ்சுடர் மேரு மந்தரம்*
*ஆகிய வாகிய அலகில் சுற்றமும்*
*ஓதருங் கடல்களும் உரக வேந்தரும்*
*மாதிர யானையும் பிறவும் வந்தவே.*

*(வரைபுனை படலம் 33)*

பார்வதி திருமணத்துக்கு மேருமலை, ஆறுகடல், யானைகள் வந்தமை கூறப்பட்டுள்ளது. இன்று நாம் கடலில் சில விலங்கினங்கள் பாறைகளாக அசைவது போல் வெவ்வேறு மன்வந்தரத்தில் உயிரினங்கள் மலைகளாக கிரௌவுஞ்சமலை, ஆறுகளாக கங்கை, யமுனை, காவேரி என்பனவும் அமைந்திருந்தன.

போதலு மதனை நோக்கிப் பொற்றொடி யாகிநின்ற சீதர னமலன்றன்பாற் சேறலுந் தொடர்ந்து பின்னர் மாதவர் யாரும் போந்தார் மற்ற தனியல்பு நோக்கினே தமில் கங்கை பாலாம் யமுனையைக் கடுத்ததன்றே.

கங்கை யமுனை சங்கமம் சிவன் மால் சங்கமத்தின் உட்பொருளாம். இஃதே ஐயனார் உற்பவம் யமுனையில் உமாதேவியார் வலம்புரிச் சங்காக அமைந்து தக்கனுக்கு மகளாக அருளப்பட்டாள். கங்கை யமுனை திரிவேணி சங்கமம் பிரளயகால வைரவக் கடவுளின் உற்பவமாகும். அதாவது அந்திமகாலமாக காசி வைரவர் அருளுகின்றார்.

உடலின் நவத்துவாரம் உட்பட வியர்வைத் துவாரங்களும் சில கற்பங்களில் ஆறுகளாக அமையும். இதனை கந்தபுராணம் திருநகரப்படலம் 76வது செய்யுளில் காமதேனுவில் இருந்து பாலியாறு உருவாகி காஞ்சி மாநகரில் அணிசெய்வது கூறப்பட்டுள்ளது.

**பங்கமில் வசிட்டன் பசுப்பொழி பாலி படர்ந்திடு முத்தரஞ் சேயைச்**
**செங்கம லத்தோன் முதலினோ ராட்டுந் திருநதி தென்றிசைச் செல்லும்**
**அங்கவற் றிடையே கம்பமே செல்லும் முதலா மாலயத் தந்திடு வேதி**
**கங்கை காளிந்தி யிடைப்படுந் தலத்தின் முற்படுங் காஞ்சிமா நகரம்.**

*(திருநகரப்படலம் 76)*

மறைகள், ஆகமங்கள், பூதங்கள், நகர்கள், காலங்கள் ஏனைய பொருட்கள் எல்லாம் பிரக்ஞை உடன் கையிலையினை அடைந்தமை பிரபஞ்ச அதிர்வாகும்.

*வாலிதாகிய மறைகள் ஆகமங்கள் மந்திரங்கள்*
*ஞாலமாதிய பூதங்கள் உலகங்கள் நகர்கள்*
*காலமானவை ஏனைய பொருளெல்லாங் கடவுட்*
*கோல மெய்தி வந்திறுத்தான கயிலைகுறுகி.*

*(கணங்கள் செல்படலம் 17)*

சிவனின் குண்டலினி சக்தியில் திருமாலின் குண்டலினி சக்தியும், பிரமாவின் குண்டலினி சக்தியும் அடங்குகின்றன. இதனை அடிமுடிதேடு படலப் பாடல் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்ததிகளைப் பாதிக்கும் ஆசிரியத்துவ முரண்பாடு!

ஆர்.கே.மேனன், ஆசிரியர்

பொதுவாக இன்றைய சமூக நிறுவனங்களில் நிர்வாக முரண்பாடுகள் முற்றிய நிலையில் அது அடைவுகளைப் (வெளியீட்டை) பாதித்து வருகின்றன. இருப்பினும் பொருள் அளவில் கிடைக்கப்பெறும் வெளியீடுகளை அது பெரிதளவில் பாதிப்பதில்லை. பாதித்தாலும் அளவீட்டின் மூலம் இனங்கண்டு அதனை சீர்செய்ய முடியும். ஆனால் சில சமூக நிறுவனங்களில் இம் முரண்பாடுகள் வெளியீட்டினைப் பாதித்து வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் பாடசாலை.

தட்டிவிட்டால் உடைந்து விடும் முட்டைக் கருக்களை தத்தெடுக்கும் களமிது. இவர்களின் அடைவுகளின் வெற்றியை வெறும் பரீட்சையில் மாத்திரம் அளவிட முடியாது. பண்புசார் விருத்திகளைப் படிப்படியாக உருவாக்க வேண்டிய பக்குவமான இடம் பாடசாலையாகும். பாடசாலைகளில் நிர்வாக முரண்பாடுகள் ஏற்படும்போது ஒன்றுக்கு மேற்பட்ட சந்ததிகளின் செயற்பாடுகள்கூட முற்றாகப் பாதிக்கும் அபாயநிலை ஏற்படும். ஆகவே பாடசாலை போன்ற மானிடப் பண்புசார் விருத்தியுடன் தொடர்புடைய சமூக நிறுவனங்களில் ஏற்படும் முரண்பாடுகளை முற்றாகக் களையவேண்டும். இல்லையேல் அபிவிருத்தியில் ஆழமான பாதிப்பை எமது சமூகம் எதிர்கொள்ளும். ஆகவே இது தொடர்பாகச் சிந்திப்பது இன்றைய இன்றியமையாத தேவையாகும்.

அதிகாரப் போர்வைகளைக் கைகளில் எடுக்கும், 'யார் பெரிது?' எனும் நிலைப்பாடுகள்தான் பாடசாலை முரண்பாடுகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. வெளியீட்டின் வெற்றியை நோக்காது தன்னை 'முன்னிலைப்படுத்த வேண்டும்' என்கின்ற நிலைப்பாடுகள் அதிகம் மலிந்த ஆளணிகள் எமது கல்விப்புலத்தில் உள்ளன. இந்த மனநிலைகள் தன்னிலை தாழும்போது முரண்பாட்டை உருவாக்குகின்றன. இது பெரும்பான்மை நிர்வாகங்களில் அதிகம் காணப்படுகின்றன. தாம் அப்பாடசாலை மட்டத்தில் தாமாக நிர்ணயித்த ஓர் நிலைக் களத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக தாமே தமக்குள் போடும் ஓர் அர்த்தமற்ற அந்தஸ்துதான் அது. இது 'தமது தராதரம் தமக்கே போதாது' எனும் அடிப்படையில் உருவாகும் அர்த்தமற்ற ஓர் ஆதங்கமாகும். தம்மை இந்த சமூகம் புறக்கணித்து விடுமோ......? என்கின்ற உள்ளுணர்வால் உருவாகும் வெளிப்பாட்டின் மேலோங்கலாகும்.

> **அதிகாரப் போர்வைகளைக் கைகளில் எடுக்கும், 'யார் பெரிது?' எனும் நிலைப்பாடுகள்தான் பாடசாலை முரண்பாடுகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. வெளியீட்டின் வெற்றியை நோக்காது தன்னை 'முன்னிலைப்படுத்த வேண்டும்' என்கின்ற நிலைப்பாடுகள் அதிகம் மலிந்த ஆளணிகள் எமது கல்விப்புலத்தில் உள்ளன.**

### அர்த்தமற்ற செயல்

ஒருவர் தனது தராதரம் தனக்கே போதும் எனவும், தனது தராதரங்களைத் தனது ஆற்றல் மூலம் நிரூபிக்க முடியும் எனவும் எண்ணுவாராயின் அனாவசியமான அர்த்தமற்ற விடயங்களில் தனது கௌரவத்தினைத் தேட முற்படமாட்டார். பாடசாலைகளைத் தமது உரித்துடைய களமாக்கி தமக்கு அப்பால் வெளியீட்டின் வெற்றிக்காக உழைக்கும் மனோபாவம் இன்று பலர் மத்தியில் குறைந்துவிட்டது. பலர் சேவைக்காகவே நாம் பணிக்கப்பட்டோம் எனும் நினைப்புடன் தமது நிலைப்பாட்டினை அப்பால் வைத்துவிட்டு வெளியீட்டின் வெற்றிக்காக உழைக்கின்றனர். அதை மறுப்பதற்கு இடமில்லை. அந்த நல்ல மனங்களும்கூட ஏன் முரண்பாடுகளைக் கண்டு முகம் கோணுகின்றனர் என்பதுவே இவை எல்லாவற்றையும் விட கவலைக்குரிய விடயமாகும். அதிபருடன் அல்லது வேறு ஆளணிகளுடன் முரண்பட்டுவிட்டு எமது அர்ப்பணிப்புமிக்கதான சேவையில் இருந்து ஒதுங்குவது எந்த வகையில் நியாயம்? யார் அவர்கள்? ஏன் அவர்களுடன் முரண்பட்டுவிட்டு நாம் ஒதுங்க வேண்டும்? அவர்களுக்கு உரித்துடைய நிறுவனமா இது? எமது தனிப்பட்ட கடமைக்குத் தடைபோட அவர்கள் யார்? எம்முடன் பணிக்காக அனுப்பப்பட்ட சேவையாளர்கள் அவர்கள். பணியெனும் நோக்கில் பயணிக்கும்போது கருத்து வேறுபாடு வரத்தான் செய்யும். அதை அவ்வப்போது தீர்த்துவிட்டு மீண்டும் புதிய மனிதர்களாகப் பயணிக்க வேண்டும். பிள்ளைகளுக்காகச் சேவை செய்ய வந்தவர்கள் நாம். அடுத்த துருவம் அதட்ட இடமளிக்க முடியாது. ஒவ்வொருவரையும் மதித்து நடக்க வேண்டுமே தவிர சரியான துருவங்களுக்காகச் சமனாக நின்று வாதிடுவது தப்பல்ல.

சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் சொல்கின்றார் 'சுய நலமுள்ளவனாய் இரு' என. ஏன் தெரியுமா? எமக்காக நாம் சேவை செய்யும்போது எந்தக் குழப்பங்களும் எம்மை அணுகாது. அடுத்தவர் நட்புக்களுக்காக நாம் இயங்கும் ஒவ்வொரு கணமும் தான் தூற்றுதலின் பின்னணியில் தூரவிலகிப் போக வேண்டி வரும்.

### முரண்பாடுகளனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும்

ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நான்கு பேர் சேரும் செயற்பாட்டில் நான்கு முரண்பாடு வந்தே தீரும். இதனைத் தீர்ப்பதற்கு ஒரு துருவத்தில் முயல வேண்டும். மறு துருவத்தில் அது வெளியீட்டைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். தொடர்பாடலில் ஏட்டிக்குப் போட்டி என்பதற்கு அப்பால் எது சரி? எது பிழை? என்பதை எம்மவர்கள் பார்ப்பது குறைவு. அதை நாம் முதலில் புரிந்து கொண்டு தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும். எமக்குள் ஒரு நியாயத்தைப் போட்டுவிட்டு எமது நிலையில் இருந்து மாத்திரம் சிந்திக்கின்றோம். அது தவறு. அடுத்தவரின் நிலையிலும் நின்று நாம் சிந்திக்க வேண்டும். எம்மால் ஒன்றை விட்டுக் கொடுக்க முடியவில்லை என்றால் அதை எப்படி நாம் மற்றவர்கள் இடத்தில் எதிர்பார்க்க முடியும்? விட்டுக்கொடுப்பது என்பது தோல்வியல்ல. ஒரு விதை முளைப்பதற்கு நாம் போடும் உரம் அது. சரியான நியாயத்தை சிலரிற்குப் புரிய வைக்க முடியவில்லை என்றால், 'இவர் இப்படித் தான் என்று விட்டு' விட்டு விலகுவதே சிறந்தது. இதற்காக முரண்படுவோமாயின் அவர்களுக்கும் எமக்கும் என்ன வேறுபாடு?. சேவை என்பது எது தெரியுமா? சேருமிடம் மற்றவர்களிற்குத் தெரியாது செய்வது தான் சேவை. ஆனால் நாமோ தெரிவதற்காக சேவை செய்கின்றோம். முரண்பாடு என்பது வேறு, பிரச்சினை என்பது வேறு. இரு துருவங்களில் சரியான நியாயம் இருக்கும் போது ஏற்படும் கருத்து வேறுபாடுகளால் ஏற்படுவது முரண்பாடு. பிரச்சனை என்பது ஒரு துருவத்தில் மாத்திரம் சரியான நியாயம் இருக்கும். மறு துருவத்தில் முற்று முழுதாக பிழையான நியாயம் இருக்கும்.

இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பது சுலபம். ஆனால் முரண்பாட்டைத் தீர்ப்பது கடினம். முரண்பாடுகள் ஒரு கட்டத்தில் பிரச்சினைகளாக உருவெடுக்கலாம். அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. பொது நிறுவனங்களில் முரண்பாடுகள் வரும் போது முதலில் வாய்த்தர்க்கத்தை எல்லைப்படுத்த வேண்டும். எதையும் இங்கு பேசி விடலாம் என்பதற்கு இது எங்கள் வீட்டுச் சமையலறை அல்ல. மாறாக பொது நிறுவனம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கௌரவம் உண்டு. அதைக் கெடுக்க எவர்க்கும் உரிமையில்லை என்பதை நினைத்துப் பேச வேண்டும்.

முரண்பாடுகளில் எமது நியாயப்பாட்டை முன்வைப்பதில் நாம் தோற்பதற்கு முக்கிய காரணம் கோபம். கருத்து வேறுபாட்டை கதைத்துப் பேசுவதற்கு ஏன் கோபப்பட வேண்டும்? ஏற்றுக்கொள்ளவில்லையானால் விட்டு விலகுவதுதான் வழி. ஆகவே புரிந்துணர்வுடன் செயற்பட்டு வெளியீட்டின் வெற்றிக்காக அனைவரும் ஒன்று திரள்வோம். இது குறைகூறும் படலமல்ல. நிறைவிற்கான சிறு முயற்சி.

## காலப்புள்ளிகளை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*நின்றானொருபா னெடுமாலது நிற்க யான்முன்*
*பின்னா வகையாற் பெருஞ் சூளிவை பேசிவானிற்*
*சென்றாயிர மாண்டு திரிந்து திரிந்து நாடிக்*
*குன்றாத சோதிக் கொழுந்தின் றலை கூடலேன் யான்*
*(அடிமுடி தேடு படலம் 75)*

'சென்றாயிரமாண்டு திரிந்து நாடி' என்பது காலத்தின் ஒடுக்கத்தினையும், அடிமுடி காணவொண்ணா சிவலிங்கம் ஒளியின் ஒடுக்கத்தினையும், சிவலிங்கக் காட்சி அண்ணாமலையான வெளியின் ஒடுக்கத்தினையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. காலமும் ஒளியலை போன்றது என்பதை காலத்தீ எனவும் பிரளய அழிவு சூலத்தீ எனும் ஒளியலையாகவும் ஆக்கத்திற்குரிய தீயாக மூலத்தீ எனும் ஒளியலையும் வெள;வேறு இடங்களை காலம் கடந்து இணைக்கும். ஆக பாலத்தீ எனும் ஒளியலையும் அமைவதனை கந்தபுராணத்தில் காணலாம்.

*பாலத்தீப் பொழி விழியுடைப் பஞ்சவத்திரனே*
*மூலத்தீப்புரை விடைப் பெருங்கேதுவே முதலாஞ்;*
*சூலத்தீக் கரத்தாயிற் கோடியோர் சூழக்*
*காலத்தீப் பெயர் உருத்திரன் வந்தனன் கடிதில்.*
*(கணங்கள் செல்படலம் 4)*

இன்றைய பௌதீகத்தில் கருச்சக்தியின் பரிமாணத்தை அறிவதற்கான ஆய்வுகூடப் பரிசோதனைகளும் அணுவினை சக்தியாக மாற்றும் ஆய்வுகளும் செய்யப்படுகின்றன.

கந்தபுராணத்தில் கிரவுஞ்சப்படலம் பாடல் மூன்றில் அணுவினை மலையாக்கவும், மலையினை அணுவாக்கவும், கடலை புவனமாக்கவும், பிரளயத்தீயை பிரளய நீராக்கவும் முடியும் என்பதைக் காணலாம்.

*அணுவினை மேருவாக்கும் அன்னதோர் மேருவெற்பை*
*நுணுகிய அணுவே யாக்கும் நெறிய,தெனைப் புவனிதன்னைப்*
*புணரிய தாக்:கும் நேமிப் புணரியைப் புவனமாக்கும்*
*இணருறு நேமித்தீயை எல்லை நீராகச் செய்யும்*
*(கிரவுஞ்சப் படலம் 3)*

புராணங்கள், இதிகாசங்கள், பிரபஞ்சத்தில் வெவ்வேறு காலங்களில் அதாவது கற்பங்களில் நிகழ்ந்த சம்பவங்களை எமக்கு வழிகாட்டுவதற்காக சிவ அருளாளர்களால் கிடைக்கப் பெற்றவை. இவை வேதவியாசரால் வேதங்களாக முனிவர்களுக்கு அருளப்பட்டது. சிவனது அசபை ஞானத்தை நேரடியாகப் பெற்ற சனகர், சனாதணர், சனந்தனர், சனற்குமாரர் மூலமும் திருநந்தி தேவர் மூலமும் இவை மென்மேலும் உபதேசிக்கப்பட்டது. அவ்வாறே இவர்கள் அருளால் ஆகமங்களும் அருளப்பட்டன. ஆகமங்களின் சாரத்தினை தமிழில் திருமூலர் திருமந்திரமாக அருளினார். இவையே சைவமெய்யியல் சாரம் ஆகும். இவற்றை நாம் தொகுக்கலாம், விரிக்கலாம், ஓம் சிவசிவ எனச் சுருக்கலாம் ஆன்மாக்களின் சித்தத்தில் அதே அவ்வாறே யாண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு

**கனகரத்தினம் தவநாதன் (J.P)**

(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி)

அன்னை மடியில் 24.09.1948

ஆண்டவன் அடியில் 11.01.2020

திதி:- பிரதமை
27.12.2023 (புதன்கிழமை)

ஆலமரமாய் அரவணைத்து அன்போடு அறிவூட்டிய ஆருயிர் தெய்வமே அப்பா!
வேரோடி விழுது விட்ட பெரு விருட்சமே எமை பாரோடு தவிக்க விட்டு பாதியிலே
போனதேனோ வானத்து நிலவாய் வலம் வந்து அரும்பணியாற்றிய அற்புதமே
இப்பிறவியில் அல்ல எப்பிறவியிலும் யாம் காணோம் உமைப் போன்ற அருமருந்தை
எம் உயிரான உயிர்ப்பூவே
நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே அன்பானவரே
உங்கள் பெயரும் விளங்கும்!!
அகிலத்திற்கு அதிபதி ஆதி சிவன்
அன்பு உள்ளத்திற்கு அதிபதி அப்பா
எங்கள் மனமெல்லாம் தங்களின்
தங்கமான நல்வாசம் வீசிட
விரைந்த உங்கள் ஆத்மா நன்னிலை
எல்லாம் பெற்று தில்லைக் கூத்தன்
திருவருளால் திருவடி அடைய சிந்தையால் சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.!

ஈர விழிகளுடன் நான்காண்டுகள் சென்றுவிட்டது நான்காண்டென்ன நான்காயிரம் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுதான் எங்கள் நினைவு

உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!!

(CS/48476) S-1

இங்ஙனம்
**மனைவி, மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள். சகோதரர் - க.தவலிங்கம்.**
**077 5599 515**

இல.292, D.S. சேனநாயக்க வீதி, கண்டி.

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 01 . 1963



இறப்பு 21 . 12 . 2023

**ஆழ்வாப்பிள்ளை வரதன்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இத்தாலி வேரோனாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை வரதன் அவர்கள் கடந்த 21.12.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை மற்றும் புஸ்பராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஸ்ரீதேவி அவர்களின் அன்புக் கணவரும், தேனுசான் அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வனஜா மற்றும் வனிதா (கனடா), வசந்தா, ஸ்ரீதரன், சபேசன், வதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஸ்ரீபாஸ்கரன் (ஜேர்மனி) மற்றும் ஸ்ரீபவன் (சுவிஸ்), ஸ்ரீதரன் (ஜேர்மனி), ஸ்ரீசக்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் நிமால்புவிராஜசிங்கம், யோகராஜா, அற்புதநாதன், மீனாம்பிகை, மங்களராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வனஜா (ஜேர்மனி), ரஞ்சினிதேவி (சுவிஸ்), கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2023) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் Via degli Scaligeri 32 Bussolengo இத்தாலியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வசந்தா (அக்கா)
மருமகன்கள் { குணதீபன், நிசாந்தன் }

(cs.53288) N.1)

## கசிப்புடன் மூவர் கைது

*அவர்களில் ஒருவர் பெண்*

யாழ். டிசெ. 27

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருவேறு இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கசிப்புடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பெண்.


யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 44 லீற்றர் கசிப்பும், 70 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் கசிப்புச் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

(அ-ம-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 . 09 . 1950



ஆண்டவன் அடியில் 27 . 11 . 2023

அமரர்

**இராசையா இராஜேஸ்வரன்**

(உரிமையாளர் - இராசையா கிறேசர்)

கடந்த (27.11.2023) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

(CS 27460) S-1

**கோண்டாவில், இருபாலைவீதி, கோப்பாய் தெற்கு.**

**குடும்பத்தினர்**
**077 777 7131**

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 08 . 1948



மறைவு 26 . 12 . 2023

**சின்னத்துரை செல்வநாயகம்**

(ஓய்வு பெற்ற சாரதி, தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கம் - வெள்ளை, மணியம்)

யாழ்., தெல்லிப்பளை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், கேசரி வீதி, தையிட்டி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வநாயகம் (ஓய்வு பெற்ற சாரதி, தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்) அவர்கள் நேற்று (26.12.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை இரத்தினம் தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரஜீவன் மற்றும் பிரதீபன், தீபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்துமதி, காலஞ்சென்ற துரைராஜலிங்கம், தர்மலிங்கம், தவமலர் மற்றும் கமலாதேவி, அற்புதம், சற்குணநாதன், கந்தசாமி, புஸ்பவதி, சிவலோகநாதன், சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கலாராணி மற்றும் நிறோ, சசிதரன் ஆகியோரின அன்பு மாமனாரும், காந்தமலர், அரியமலர், சிவனேசன், பிறேமலதா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இந்திராதேவி, ரதிதேவி, காலஞ்சென்ற அருள்நந்தி, சிவகுமார், ரூபி, உஷாநாயகி, சிவகுமாரன், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தன், ஓவியா, அபூர்வன், ஆரபி, அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2023) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தையிட்டி ஆவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வைரவர் கோவிலடி,
K.K.S road,
மல்லாகம்.

(Cs 27452) S-1

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 805 8609**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 27.11.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குல விருட்சம்

## இராமகிருஷ்ணன் றதீசன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (25.12.2023) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (27.12.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**பிரதேச செயலகம் அருகாமை,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

பிரிவால்துயருறும்
**குடும்பத்தினர்**

(cs.) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 03 . 1929



மறைவு 22 . 12 . 2023

## இராமுப்பிள்ளை இராசரத்தினம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை இராசரத்தினம் கடந்த (22.12.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அம்பலம்பிள்ளை (பிரபல வர்த்தகர்) சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும், அமர்தகலா (Australia), காலஞ்சென்ற இராமேஸ்வரன் (Norway), சசிகலா (London), நித்தியகலா ( Switzerland), தணிகேஸ்வரன் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தம்பிஐயா, இ. இராசலிங்கம் (பண்டிதர்), இ.திருநாவுக்கரசு (பண்டிதர்), இ.சுந்தரலிங்கம் (கல்விப்பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை, இராஜாம்பாள், கதிர்காமநாதன் அகியோரின் மைத்துனரும், ஞானரட்ணம், ஜெயகௌரி, அரவிந்தன், சிறீதர், சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், சந்திரிகா, அட்ஷை, இரக்சனா, தர்ஷிகா, கிறிஷ்வினி, தானிகா, சனோஜன், தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2023) புதன்கிழமை முற்பகல் 10.15 தொடக்கம் 2.00 மணிவரை Palm Chapel Macquarie Park Cemetery and Crematorim என்னும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cr., 53262) N-1


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 02.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## இந்திரசித்து விக்கினேஸ்வரன்

(லலிதா ஜுவல்லரி)



கண்ணீர் பிரளயத்தில் தவிக்க விட்டு
ஆறாண்டுகள் சென்று விட்டன.
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் – நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல்
தவிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**42/2, கடையிற் சுவாமி**
**கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பிறப்பு
11.02.1977

திதி:- மார்கழி
தேய்பிறை பிரதமை
(27.12.2023)

இறப்பு
02.01.2018

(CR 41357) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 27

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தால் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற வுள்ளது.

நிகழ்வில் தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரையும், இளஞ்சைவப் புலவர் நித்தியபாபுதரன் " ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். (ரி)


## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னனி
மின்சார உபகரண விற்பனை நிலையத்தில்
புதிதாக ஆரம்பித்த நவீன காட்சியறைக்கு
கணினி அறிவுள்ள விற்பனையாளர்
தேவைப்படுகின்றார்கள்.

திறமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் அழகு சார்ந்த வர்ண மின்விளக்குகள் தொடர்பான விற்பனை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். EPF / ETF வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
ESS JEY ELECTRICALS
NO.: 342, STANLY ROAD, JAFFNA,
T.P: 021 221 9059


## என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்

18ஆம் ஆண்டு நினைவலைகள் — 03ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 13.01.1932 — மறைவு 16.12.2005

அமரர்
முருகேசு தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)



தோற்றம் 07.07.1932 — மறைவு 13.01.2020

அமரர் திருமதி
நவநீதம் தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

எம் அன்புத் தெய்வங்களே! அம்மா ! அப்பா !
எமை அன்புடனும், பாசத்துடன் வளர்த்தீர்கள்
எமைவிட்டு பிரிந்ததேனோ!
உங்கள் இருவரையும் பிரிந்து தவிக்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

'கோகுலம்'
சங்கத்தானை, சாவகச்சேரி.


அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனி, தங்கை.

(CR 41387)A-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:02.04.1954 அமரர் உதிர்வு:20.12.2021

### வைத்திலிங்கம் செல்வரத்தினம்



திதி:ஆர்த்திரா தரிசனம்
(27.12.2023)

ஆண்டுகள் இரண்டு அகன்றாலும் தந்தையே!
உங்கள் அன்பின் அரவணைப்பு
எம்மனத்துள் என்றும் விட்டகலாது
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
மீளாத்துயரில் மூழ்கிடும்
உங்கள் நினைவுகளும் சிந்தனைகளும்
எம்மனத்தே என்றென்றும் நிலைத்திருக்கும்
எமது ஈரவிழி நீரால் உம் பாத மலர்
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

தொ.பே:077 146 6744

48/3, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 53284) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் மூத்த சகோதர தெய்வம்

### அமரர் சுப்பிரமணியம் நீதிராஜா

(ஆசிரியர்,
யாழ்/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

தோற்றம் 19.04.1970 — மறைவு 07.01.2023

பூக்களின் வாசமும் - உன்
புன்னகையில் இருந்தபோது
தாய்மொழியில் தனித்தவன் - நீ
மேகமென ஓடி - உன்
மேனிதனில் வியர்வை கொண்டு
அன்பு கொண்டோரின் தேவைகளை
துன்பம் பாரா துடைத்தவன் நீ !
கலங்கிய நீரில் கண்ணீர் துளிகள்
காவியம் பாட கண்களின் ஓரமாய்
கசிந்தது துன்பமது நீராக!
அலைபோல் உன் நினைவுகள்
ஓராண்டாய் தவழ
இழந்து தவிக்கும் உறவுகளின் இதயம்
உன் பிரிவை எண்ணித்தவிக்க
இன்னுமொரு பிறவியெடுத்து
எங்கள் குடும்பத்தில் வரமாய் வர
விழிவாசல் தனைகாத்துக்கிடக்கு
உன் உறவுகள்

சன்னதிமுருகன் வேக்சொப்
அன் சேவிஸ்
டேவிட் பீரிஸ் மோட்டர்
கம்பனி (DPMC)

ஸ்ரீலங்கா வீதி,
உடுவில் வடக்கு,
உடுவில்,
சுன்னாகம்.

077 711 0199, 077 201 8275

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்குத் தொற்று தீவிரம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் டெங்குத் தொற்றை எதிர்கொள்வதற்காக சிறப்பு விடுதிகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமட்டும் 71 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரும் தங்களின் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தால் மட்டுமே இந்தப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (அ-ம-125)

## கெஹலியவை

கவே அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த மருந்துகள் அனைத்தும் இந்தியக் கடனிலேயே இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்டவற்றில் ஒருதொகுதி மருந்துகள் விமான நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளன. ஆதலால், கெஹலிய கைது செய்யப்படுவதற்கு இந்தச் சான்றாதாரமே போதுமானது என்றும் அந்தக் கூட்டுக்கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-6)

## கெஹலியவிடம்

விடம் நேற்று விசாரணைகளை மேற்கொண்டது.

கெஹலியவின் இல்லத்துக்கு நேற்றுச் சென்ற அந்தக் குழுவினர் இவ்வாறு விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியத்தைப் பதிவுசெய்துள்ளனர். விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சட்டத்தரணிகள் குழுவொன்றும் அங்கு முன்னிலையாகியிருந்துள்ளது. இந்த விடயத்தில் முன்னதாகப் பலர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தொழிலுக்காக

முரணானதும் அச்சப்படக்கூடியதுமான தகவல்கள் வெளிவருவதால் இது குறித்த தெளிவூட்டலை வழங்க வேண்டும் என்று அவருடைய குடும்பத்தினர் வெளிவிவகார அமைச்சைக் கோரியுள்ளனர்.

குறித்த இளம் குடும்பத்தலைவர் இம்மாதம் 2ஆம் திகதி வேலை வாய்ப்புக்காக சவுதி அரேபியாவுக்கு சென்ற நிலையில் அவரது திறன்பேசி நிறுத்தி வைக்கப்பட்டு நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அவருடைய மனைவி வேறு பலருடன் தொடர்பை ஏற்படுத்தி தனது கணவனின் நிலை குறித்து விசாரித்துள்ளார். இதன்போது அவர் விபத்தில் சிக்கிவிட்டார் என்றும், வேறுவிதமான அசம்பாவிதங்கள் நேர்ந்துவிட்டது என்றும் அவருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தனது கணவரின் நிலையை வெளிப்படுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சைக் கோரியுள்ளார். (அ-ம-100)

## வல்வெட்டி

செய்த நகைக்கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் கடந்த 20ஆம் திகதி இரண்டு வீடுகளில் ஐந்தரை இலட்சம் ரூபா பணம் மற்றும் 25 பவுண் நகைகள் என்பன அண்மையில் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே மேற்படி திருடர்களுடன் தொடர்புடைய ஏழு சந்தேகநபர்கள் காங்கேசன் துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே பிரதான சந்தேகநபராவார். சந்தேகநபர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றார். அத்துடன், திருடப்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்த மன்னாரைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

## சிமெந்து

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதுதான் என்னுடைய கருத்து. புதிய திட்டங்கள் அறிமுகமாகின்ற பொழுது மக்கள் அதனை எதிர்ப்பதும் அது நடைமுறைக்கு வந்தபின்னர் அதனுடன் இணைந்து பயணிப்பதும் வழமையான ஒன்றே.

விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்த பின்னரே குறித்த பகுதியில் சிமெந்துத் தொழிற்சாலை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் சிமெந்துத் தொழிற்சாலையை அமைத்தால் குழந்தையின்மை ஏற்படும் என்று தெரிவித்தமை விஞ்ஞானபூர்வமற்ற கருத்தே. ஆதலால், இந்தத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியே தீருவேன். நித்திரை கொள்பவனை எழுப்பலாம், நித்திரை கொள்பவன்போல் நடிப்பவனை ஒன்றும்செய்ய முடியாது - என்றார்.

பொன்னாவெளியில் சிமெந்துத் தொழிற்சாலை அமைந்தால் உவர்நீர் அங்கு உட்புகுவதோடு சூழல் சமநிலை குழம்பி, மக்களின் வாழ்வாதாரத்துக்கு ஒவ்வாததாக அந்தப்பகுதி மாறிவிடும் என்று தெரிவித்து மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## கமராவை

முல்லைத்தீவு, டிசெ. 27

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில், திருடச் சென்றவர்கள் பாம்புக் கொத்துக்கு இலக்காகியுள்ளனர் என்று அண்மையில் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. பாம்பு தீண்டியவர் திருடச் சென்றவர் அல்ல. மாறாக ஆலயத்தின் சி.சி.ரி.வி. கமராக்களை திருத்தச் சென்றவரே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாம்பு தீண்டிய மேற்படி நபர் மருத்துவச் சிகிச்சைகளுக்குப் பின்னர் முல்லைத்தீவில் நேற்று செய்தியாளர் சந்திப்பை மேற்கொண்டு இந்த விடயங்களை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

ஆலய நிர்வாகத்தினருக்கு இடையில் இருக்கும் முரண்பாடுகளும், சி.சி.ரி.வி. கமராக்கள் இயங்குவதை விரும்பாத சில சக்திகளுமே இவ்வாறு திட்டமிட்டுப் போலியான செய்தியைப் பரப்பியுள்ளன என்றும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். (அ- ம)

## மாணவியின் இறப்புக்கு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 27

யாழ்ப்பாண பல்கலை மாணவியின் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி அண்மையில் உயிரிழந்த நிலையில், அவருடைய மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்து உயிரிழந்த மாணவியின் உறவினர்களால் பொலிஸ் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதையடுத்தே மாணவியின் இறப்புத் தொடர்பில் அறிக்கை வழங்குமாறு அசேல குணவர்த்தன உத்தரவிட்டுள்ளார். (அ-ம-125)

## மரணத்தில் சந்தேகம்

இந்த நிலையிலேயே, உயிரிழந்த மாணவிக்கு மருந்து ஒவ்வாமையென்று எதுவும் இல்லை. மாறாக அவருக்கு ஏற்றப்பட்ட ஊசி மருந்து தொடர்பில் எமக்கு எந்த விளக்கமும் வழங்கப்படவில்லை என்று முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-20-66)

## சிறையில் நெருக்கடி

நடவடிக்கைகளின்போது 13 ஆயிரத்து 66 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 97 பேர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்தக் கைதுகளின் எதிரொலியாக சிறைச்சாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், அண்மையில் கைது செய்யப்பட்டவர்களை புதிதாக அமைக்கப்பட்டுவரும் சிறைச்சாலையில் திறந்த வெளியில் தடுத்துவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

# வடமாகாணப் பாதைக்கான ரயில் அட்டவணை மாற்றம்

**யாழ்ப்பாணம், டிசெ. 27**

**மாஹோ-அநுராதபுரம் இடையேயான ரயில் பாதை நவீனமயமாக்கப்படுவதால் வடக்குப் பாதையில் தொடருந்து சேவை அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மஹோ- அநுராதபுரம் இடையேயான ரயில் பாதை நவீனமயப்படுத்தப்படுவதனால் அந்தப் பகுதி வரும் ஜனவரி 7ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு தற்காலிகமாக மூடப்படுகின்றது.

இந்த அத்தியாவசிய நவீனமயமாக்கல் முயற்சியானது மிகவும் நம்பகமான மற்றும் மேம்பட்ட தொடருந்து சேவையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கொழும்பில் இருந்து காங்கேசன்துறை மற்றும் தலைமன்னாருக்குச் செல்லும் பல நேரடி ரயில் சேவைகள் அபிவிருத்தி திட்ட காலத்துக்கு ரத்து செய்யப்படும். எனினும் கொழும்பு -காங்கேசன்துறை இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் சேவை, உத்தர தேவி இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் சேவை, காங்கேசன்துறைகொழும்பு இரவு அஞ்சல் சேவை என்பன அனுராதபுரத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் தினமும் இரண்டு தொடருந்து சேவைகள் இடம்பெறும்.

அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறைக்கு காலை 8:20 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் காங்கேசன்துறையை நண்பகல் 12:23 மணிக்கு வந்தடையும். மற்றொரு ரயில் அநுராதபுரத்திலிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 6:33 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும்.

காங்கேசன்துறையிலிருந்து காலை 6 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் ரயில். அநுராதபுரத்தை முற்பகல் 10:16 மணிக்கு சென்றடையும் மற்றொரு ரயில் காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2:20 மணிக்கு சேவையை ஆரம்பித்து மாலை 6:57 மணிக்கு அநுராதபுரத்தைச் சென்றடையும் என்றுள்ளது. (அ-ம)




# விபத்தை ஏற்படுத்தியவர் தூக்கில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 27

விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற நபர், தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஓட்டோச் சாரதியாகப் பணியாற்றும் அந்த நபர், நேற்று முன்தினம் இரவு குப்பிழான் வீதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்தபோது விபத்து சம்பவித்துள்ளது. இதையடுத்து அவர் ஓட்டோவை அவ்விடத்திலேயே கைவிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்றையதினம் அவருடைய வீட்டுக்கு முன்னால் உள்ள புளியமரத்தில் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-27)

# சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனவரிமாதத்தில் வெளிவரும்!

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனமும், பொருளாதாரக் கொள்கைத் திட்டமும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணி ஜனவரியில் உதயமான பின்னர், மேற்படி இரு விடயங்களையும் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், ஜனவரி முதல் தொகுதி கூட்டங்களை நடத்தவும், மக்களின் கருத்துகளை பெறவும் ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு ஜனவரி முதல் வாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தவுள்ளது. எதிர்க்கட்சி தலைவரும், பங்காளிக்கட்சி தலைவர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் வருகையால் வடமாகாண மீனவர்கள் பாதிப்பு

## மன்னார் மீனவ சமாச செயலாளர் ஆலம் குற்றச்சாட்டு

**மன்னார், டிசெ. 27**

**எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களைச் சூறையாடிச் செல்லுதல், மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகளைக் களவாடுதல் போன்ற செயற்பாடுகளால் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மீனவ குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக பெரும் பாதிப்பை எதிர் நோக்குவதாக மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசசெயலாளர் முஹமட் ஆலம் தெரிவித்தார்.**

இந்திய மீனவர்களின் வருகையால் வடக்கு மாகாணத்தில் கடற்பகுதிகளிலுள்ள வளங்கள் சூறையாடப்படுகிறது மற்றும் இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் பல ஆயிரக்கணக்கான குஞ்சு மீன்களை அரித்தும், பல இலட்சம் பெறுமதியான வலைகளை அறுத்தும், களவாடியும் செல்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் செய்வதால் வடமாகாணத்தில் மீன்பிடி கைத்தொழிலை நம்பி இருப்பவர்களின் நிலை நாளாந்தம் பாதிப்படைகிறது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் 40 மீனவ கூட்டுறவுச் சங்கங்களும், நான்கு சமாசங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு பெரிய கட்டமைப்பு இருந்தும் மீனவ சமூகத்தினருக்கான தீர்வுகளைப் பெற முடியவில்லை என்ற ஆதங்கம் சங்கங்களின் தலைவர்களிடம் காணப்படுகிறது. இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து எமது வளங்களை அழிப்பதையும் சூறையாடிச் செல்வதையும் உடனடியாக நிறுத்துவதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ரி-213)

# ஒடுக்கப்படும் சமூகம் மீண்டெழவேண்டும்!

## பேசாலை பங்குத் தந்தை நத்தார் வாழ்த்து

மன்னார், டிசெ. 27

மற்றவர்களை அன்புசெலுத்தும் விழாவாகக் கொண்டாடப்படும் கிறிஸ்துவின் பிறப்பு, எமக்கு தாழ்த்தப்படும்- ஒடுக்கப்படும் சமூகங்கள் மீண்டெழவேண்டும் என்ற நற்செய்தியைப் பகிர்கிறது என்று பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.அன்ரன் அடிகளார் தெரிவித்தார்.

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருப்பலி ஒப்புக்கொடுப்பு மறையுரையில் அவர் இதனைத் தெரிவித்தார். கிறிஸ்து பிறப்பை பெருவிழாவாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அவதரித்துள்ள பாலன் பாவத்தில் மூழ்கியுள்ள மனித குலத்தைக் காப்பாற்றுவார்.

நிபந்தனையற்ற முறையில் எமது பாவங்கள் இறைவனால் மன்னிக்கப்படுகின்றது. நாமும் நிபந்தனையற்ற முறையில் மற்றவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் உள்ளங்களாக இருக்கவேண்டும்- என்றார். (ச-60)

## குருபூசையும் சொற்பொழிவும்

யாழ், டிசெ. 27

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமகாச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிகாமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடத்தும் வாராந்த பெரியபுராணச்சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் 38 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் த. மனோஜ்குமார் "ஐந்தெழுத்தோதி அடியவர்களுக்கு அமுதூட்டி இறைவன் திருவடி சேர்ந்த நாயனார்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ரி)



# ஊழலுக்கு எதிராக இறங்கும் ரொஷான்

கொழும்பு, டிசெ. 27

ஊழலுக்கு எதிராக மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்பி சில அதிரடியான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், ஜனவரியில் இந்த அமைப்பு உதயமாகவுள்ளது என்றும் புதியதொரு அரசியல் பயணத்தை அவர் ஆரம்பிக்கவுள்ளார் எனவும் அறியவருகிறது.

இதேவேளை - ஸ்ரீலங்கா கிரிக்கெட்டில் ஊழல் தலைவிரித்தாடுகின்றது என சுட்டிக்காட்டிய விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ரொஷான் ரணசிங்கவுக்கும் ஆளுந்தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலால் அவரது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

# சுற்றுலாவிகள் படையெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

பண்டிகைக் காலம் மற்றும் விடுமுறையைப் பயன்படுத்தி தெற்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளையும் இவர்கள் சுற்றி பார்வையிட்டு வருகின்றனர். (ச-17)


**வாடகைக்கு வீடு தேவை**

கொக்குவில், கோண்டாவில், தாவடி, நல்லூர் மற்றும் யாழ்நகரில் வீடு வாடகைக்குத்தேவை.

077 110 8451, 076 790 2678

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இராசபாதை வீதி கரையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 882 8638


# ஆளணிப் பற்றாக்குறை தீர்க்க இஸ்ரேல் திட்டம்

காஸாவில் நடைபெற்றுவரும் போர் காரணமாக இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள மனிதவளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு வெளிநாட்டுப் பணியாளர்களை வரவழைக்க இஸ்ரேல் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதற்கென இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பணியாளர்கள் அழைக்கப்படுகின்றனர். இலங்கையிலிருந்து முதல் கட்டமாக நூறு பேர் இஸ்ரேலுக்குச் சென்றுள்ள நிலையில் தொடர்ச்சியாகவும் தொழிலாளர்கள் வர வழைக்கப்படவுள்ளனர்.

அதேவேளை இதுதொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்தார். (ச- 6)



கிளிநொச்சி, முழங்காவில் மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் சிறப்புற்றதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-159)


**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி**



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு:077 165 1729, 077 773 0567, 021 222 8334


செய்தி :021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org